


சென்னையில் அக்.2 இல் நடைபெறவுள்ள போதை பொருள் ஒழிப்பு மாரத்தான் போட்டியையொட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் Run For Drug Free TN என அச்சிடப்பட்ட டிசார்ட் மற்றும் துண்டு பிரசுரத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.



கிருஷ்ணகிரியில் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் விடுதியில் நேற்று முன் தினம் ஆய்வு செய்தார். அது தொடர்பாக சமூக வலைத்தளத்தில் அவர் பதிவிட்ட போது, சேலம் அரசு கலைக்கல்லூரி மாணவர்களுக்கான ஆதி திராவிடர் நலத்துறை விடுதியிலும் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென பின்னூட்டமிடப்பட்டது. எனவே, சேலம் அரசு கலை & அறிவியல் கல்லூரி ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் நேற்றிரவு திடீர் ஆய்வு மேற்கொண்ட ஆய்வின் போது, விடுதியில் உள்ள மாணவர்கள் தங்கும் அறை, படிக்கும் அறை, உணவுப் பொருட்கள் அறை, சமையல்கூடம், கழிவறை என ஒவ்வொரு அறையாக சென்று விடுதியில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் தரத்தை உறுதிசெய்ய அவற்றையும் ஆய்வு செய்தார்.

ஒன்றியச் செயலாளர் ந.பரிமளம் தலைமையில்

# கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் 3000 பேருக்கு நலஉதவிகள்!

## கே.வி.உமாமகேஸ்வரி - சி.எச்.சேகர் வழங்கினர்!

திருவள்ளூர், செப். 29-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிபூண்டி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி சுண்ணாம்பு குளம் ஒப சமுத்திரம் ராக்கம்பாளையம் - மெதிபாளையம் ஆகிய நான்கு ஊராட்சிகளில் நடைபெற்றது. அதில் 3000 ஏழைகளுக்கு இலவச சேலை அறுசுவை உணவு மற்றும் மாணவர்களுக்கு கல்வி நிதி உதவி தொகை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி கே.வி. உமாமகேஸ்வரி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளருமான சி.எச். சேகர், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர், சுந்தரம் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடாஜலபதி, குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கு கும்மிடி பூண்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ந.பரிமளம் தலைமை வகித்தார்.

மாவட்டப் பிரதிநிதி ஆர்.எஸ்.காளத்தி வரவேற்று பேசினார்.

இதில் வி.சரவணன், கே.இ.திருமலை, என்.எஸ்.மூர்த்தி, இ.பிரபு, வி.புருஷோத்தமன், பத்மஜா கௌரி சங்கர், வள்ளியம்மாள், பழனி மெய்யநாதன், ஜி.வீரன், கே.விஜயகுமார், ஆர்.சரத்குமார், ஜி.லோகேஷ், எம்.சரவணன், த.பிரபாகரன் உள்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சேலம் அரசு கலைக்கல்லூரி மாணவர்களுக்கான ஆதி திராவிடர் நலத்துறை விடுதியில் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்ட போது, அங்குள்ள விடுதி மாணவர்கள் விளையாட்டு உபகரணங்கள் வேண்டுமென கோரிக்கை வைத்தையேற்று Cricket Bat– Carrom board – Tennis Bat – Football – Volleyball உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்ளனர்.

கழக ஆட்சியில்தான் - பல ஆண்டுகளாக

# ஓடாமலிருந்த கோயில் தங்கத் தேர்களை உலாவரச் செய்துள்ளோம்!

## புரசைவாக்கத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, செப்.29-

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் மற்றும் மரத்தேர் செய்யும் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (27.09.2023) சென்னை, புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.



பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள திரு க்கோயில் திருப்பணி களை விரைந்து முடித்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களில் பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்துவதற்காக தங்கத்தேர், வெள்ளித்தேர் மற்றும் மரத்தேர்களை உருவாக்குவது போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், ரூ.31.24 கோடி மதிப்பீட்டில் 51 புதிய மரத்தேர்கள் செய்வதற்கும், ரூ.4.12 கோடி மதிப்பீட்டில் 13 மரத்தேர்களை மராமத்து செய்வதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் செய்வதற்கும், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயில், சென்னை, காளிகாம்பாள் திருக்கோயில், திருக்கருக்காவூர், கர்ப்பகரட்சாம்பிகை திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், திருத்தணி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர்கள் செய்வதற்கும் அறிவிப்பு செய்திருந்தோம்.

அதன்படி இன்றைய தினம், புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத் தேர் செய்திட உபயதார நிதியின் மூலம் ரூ.31.5 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் உருவாக்கும் பணி மற்றும் ரூ.81 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணிகளை தொடங்கி வைத்தோம். நங்கநல்லூர், ஆஞ்சநேயர் திருக்கோயில் தங்கத்தேர் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வெள்ளித்தேர் உருவாக்கும் பணி நிறைவு பெற்று தணிகை முருக பெருமானுக்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த திருக்கோயில் தங்கத்தேர்களை மீண்டும் உலாவர செய்துள்ளோம். குறிப்பாக 12 ஆண்டுகள் ஓடாமல் இருந்த ராமேஸ்வரம் தங்கத்தேர், 10 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சமயபுரம் தங்கத்தேர், 5 ஆண்டுகள் ஓடாமல் இருந்த திருத்தணி தங்கத்தேர், 2 ஆண்டுகள் ஓடாமல் இருந்த வடபழனி மற்றும் திருச்செந்தூர் தங்கத்தேர்களை ஓட வைத்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

புரசைவாக்கம், கங்காதரேசுவரர் திருக்கோயிலுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.10 கோடி செலவில் திருப்பணி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் தங்கத்தேர் மற்றும் மரத்தேர் பணிகளை தவிர்த்து சுமார் ரூ.4 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுர விமானங்கள் மற்றும் சன்னதிகளின் மராமத்து பணி மற்றும் வர்ணம் பூசும் பணி, பிரகாரத்தில் கருங்கல் பதிக்கும் பணி, மின் பணிகள், நந்தவனத்தை சீரமைத்தல், காரியக் கூடம் திரும்ப கட்டுதல், திருக்குளத் திருப்பணி போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர், இத்திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முழு ஈடுபாட்டோடு கண்காணித்து விரைவுபடுத்தி வருகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு நடத்தப்படும்.

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் திருக்கோயில்களின் அனைத்து திருக்குளங்களையும் சுத்தப்படுத்தி மழைநீரை சேகரித்து தேக்குவதற்கான கட்டமைப்புகளை சீரமைத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஏற்கனவே துறையால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி திருக்கோயில் திருக்குளங்கள் தூர்வாரி சுத்தப்படுத்தப்பட்டு மழைநீரை சேகரிக்கும் வகையில் தயாராகி வருகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் அ.சங்கர், இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி சி.நித்யா, சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ்.ரவிச்சந்திரன், திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் டாக்டர் பெ.வெற்றிக்குமார், அறங்காவலர்கள் எம்.ஏ.கோபிநாத், கே.எஸ்.குமாரசாமி, பி.ரத்தினம், திருமதி நா. லீலாவதி, செயல் அலுவலர் சா.இராமராஜா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நிவேதா எம்.முருகன். எம்.எல்.ஏ., தலைமை! மயிலாடுதுறை மாவட்டம் -

# பூம்புகாரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! மாபெரும் கவியரங்கம்!

## செ.இராமலிங்கம் எம்.பி., - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., - குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

நாகை. செப்.29

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சர்hபில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கவியரங்கம் மற்றும் பொதுக்கூட்டம் பூம்புகார் கொற்றவைபந்தலில் நடைபெறுகிறது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜுு.என்.ரவி, ஒன்றியக் குழு தலைவர் கமலஜோதிதேவேந்திரதன், சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜே.பிரபாகரன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர் சுபாநெடுஞ்செழியன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் காளி. தேசேப்பன், மாவட்ட மீனவர் அணி துணை தலைவர் பி.மாரிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர் என்.சசிக்குமார், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் வேல்சாமி, மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் மா.இராசாங்கம், மாவட்ட இலைக்கிய அணி துணை அமைப்பாளர்கள் என்.தங்கவேல், அங்குதன், நா.செ.இளமுருகு செல்வன், பு.இரவிச்சந்திரன், ஆர். உதயசங்கர், அரிகிருஷ்ணன், ஜெ.நடராஜன், மாணிக்கம், எஸ்.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ஜுுபையர்அகமது, ஒன்றிய அவைத்தலைவர் எம்.என்.ஆர்.நெடுஞ்செழியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.சுதாகர், க.ரவிச்சந்திரன், உதயராணி, ஒன்றிய பொருளாளர் மா.தமிழரசன், மாவட்ட பிரதிநிதிகள் எம்.ஆர்.கணேசன், வை.துரைராஜன், கோபி ஆகியோர் முன்னிலைவகித்தனர். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகப்பா வரவேற்றார். சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சுகுமார் தொடக்க உரையாற்றினார். கவியரங்கத்தை கழக கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவைக்குழு தலைவர் திருச்சி சிவா தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து நடைபெறும் கவியரங்கத்திற்கு தமிழின் தவமகன் கலைஞர் என்ற தலைப்பில் கவிதைப்பித்தன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் ஆண்டாள்பிரியதர்ஷினி, தஞ்சைஇனியன், வீ.ம.இளங்கோவன், கொற்கைமுத்து, மேட்டூர் வைரமணி ஆகியோர் பேசினார்கள். கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம், கவியரங்க விழாவில் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தலைமை அரசு கொறடா கோவி. செழியன் எம்.எல்.ஏ. சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என். சிவபாலன், எம்.எம்.சித்திக், மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல. சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், ப.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மங்கை எம்.சங்கர், கு. வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பேரூர் கழகச் செயலாளர்கள் முத்துராஜா, அண்ணாதுரை, பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். சுவாமிநாதன், பி.கென்னடி, வின்சென்ட், அ.காந்த, சங்கரநாராயணன், பி.சிவதாஸ், ஜெ. கபிலன், அர்சத், எஸ்.வெற்றிவேல், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.தியாகராஜன் நன்றி கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் சீர்காழி கிழக்கு ஒன்றிய தி.மு.க., மாவட்ட இலக்கிய அணி சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா கவியரங்கம், பொதுக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், அரசு கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ., சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கவிதைப்பித்தன் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. முனியசாமி

### செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.